TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8109713

1. District : மாவட்டம் திருவாரூர் PS: காவல்நிலையம் ஊ.த.க.மை, திருவாரூர் Year: ஆண்டு 2022 FIR No.: மு.த.அ. எண் 01 Date: நாள் 03.02.2022

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: 120(B), 409, 420, 465, 468, 471 IPC and Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: 13(2) r/w 13(1)(c), 13(1)(d) of PC Act 1988 as amended 2018. Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 2016 Date to : நாள் வரை 2019

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03.02.2022 Time : நேரம் 12.00 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக In the outcome of Vigilance Report.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் புதிய பேருந்து நிலையம்,

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி திருவாரூர். 2 km North East

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் B V. நந்தகோபால் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S/o வரதராஜன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் DSP (g) Address : முகவரி V & AC, திருவாரூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)
2

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்தனுப்பப்படுகிறது :</u>

திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளராகிய நான் 03.02.2022ஆம் தேதி 12.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குனரின் உத்தரவுபடி இயக்குனரகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற நமூனா VR.No. 1048/2019/LB/TVR-ன் படியும், இரகசிய விசாரணையின் அடிப்படையிலான விழிப்பு அறிக்கையின் படியும் பதிவு செய்யப்பட்ட வழக்கின் விபரம் பின்வருமாறு.

<u>எதிரிகள் விபரம்:</u>

A1) திருமதி.K. உமாமகேஸ்வரி, க/பெ. கண்ணன், முன்னாள் நகராட்சி ஆணையர், திருவாரூர்.

A2) திரு.P.ஜோதிமணி, த/பெ. பிச்சைப்பிள்ளை, முன்னாள் நகராட்சி பொறியாளர், திருவாரூர்.

A3) திரு.M. காந்திராஜ், த/பெ. S.முத்தையன், முன்னாள் நகராட்சி ஆணையர், திருவாரூர்.

A4) திரு.வெங்கடேசன், பணி கள மேற்பார்வையாளர், நகராட்சி அலுவலகம், திருவாரூர்.

A5) திரு.நாகராஜன், பணி கள மேற்பார்வையாளர், நகராட்சி அலுவலகம், திருவாரூர்.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 3/2/22
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் B.V. நந்தகோபால்
Rank: நிலை துணை காவல் கண்காணிப்பாளர் VEAC, திருவாரூர்.

A6) திரு.D.முருகவேல், ஒப்பந்ததாரர், 166 ஹரேராம் நகர், திருவள்ளூர், சென்னை.

A7) M.தாமோதரன், 4/13, Sarnapuri Appartments, 3A 3rd Lloor, Mugappair, Chennai,

A8) J.M.Construction, 166 Hereram & Nagar, Rajajipuram, Thiruvallur.

A1) திருமதி.K. உமாமகேஸ்வரி, க/பெ. கண்ணன் என்பவர் திருவாரூர் நகராட்சி ஆணையராக 12.02.2014 முதல் 29.09.2014 வரையிலும், 09.09.2018 முதல் 08.03.2019 வரை கும்பகோணம் ஆணையர் (பொறுப்பு) திருவாரூர் ஆணையராகவும், A2) திரு P.ஜோதிமணி, த/பெ. பிச்சைப்பிள்ளை, என்பவர் 07.05.2018 முதல் 28.09.2018 வரை, திருவாரூர் நகராட்சியில் பொறியாளராகவும், 14.03.2019 முதல் தற்போது வரை பொறியாளர், மயிலாடுதுறை, (பொறுப்பு) திருவாரூர் நகராட்சி பொறியாளராகவும், A3) திரு.M. காந்திராஜ், த/பெ. S.முத்தையன் என்பவர் திருவாரூர் நகராட்சி ஆணையராக 10.03.2017 முதல் 31.08.2018 வரையிலும், A4) திரு.வெங்கடேசன் என்பவர் திருவாரூர் புதிய பேருந்து நிலையம் கட்டும் பணியில் நகராட்சியில் பணி களமேற்பார்வையாளராக 01.04.2013 முதல் 15.09.2016 வரையிலும், A5) திரு.நாகராஜன், திருவாரூர் புதிய பேருந்து நிலையம் கட்டும் பணியில் நகராட்சியில் பணி களமேற்பார்வையாளராக 16.09.2016 முதல் 31.03.2019 வரையிலும் பணிபுரிந்துள்ளார்கள். ஆகவே மேற்படி நபர்கள் ஊழல் தடுப்புச் சட்டம் 1988, சட்டப்பிரிவு 2(c)-இன் படி பொதுஊழியர் ஆவார்கள்.

A6) திரு.முருகவேல், ஒப்பந்ததாரர், 166 ஹரேராம் நகர், திருவள்ளூர், சென்னை என்பவர் மேற்படி திருவாரூர் புதிய பேருந்து நிலைய கட்டுமானபணி தொடர்பாக ஒப்பந்தம் பெற்று திருவாரூர் நகராட்சியில் Roc.No.2272/2012/E1 நாள்:06.03.2013-ன் படியும், A7) M.தாமோதரன், 4/13, Sarnapuri Appartments, 3A 3rd Lloor, Mugappair, Chennai, என்பவர், திருவாரூர் புதிய பேருந்து நிலைய கட்டுமானபணி தொடர்பாக சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக, தலைமை பொறியாளரின் Roc.No.18281/2016/Do1 Dated:19.07.2016-ன் படியும், A8) J.M.Construction, 166 Hereram & Nagar, Rajajipuram, Thiruvallur என்ற நிறுவனத்தினர் திருவாரூர் நகராட்சி தீர்மான எண்.183/2019 நாள்:27.02.2019-ன் படியும் ஒப்பந்தம் பெற்று பணி கட்டுமான பணி மேற்கொண்டுள்ள தனிநபர்கள்.

திருவாரூர் நகரில் அரசு போக்குவரத்து பணிமனைக்கு அருகே அமைந்திருந்த பழைய பேருந்து நிலையத்தில் அனைத்து பேருந்துகளும் நிற்பதற்கு போதிய இடவசதி இல்லாத நிலையில் திருவாரூர் நகரில் மிகுந்த போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டதாலும், திருவாரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட நாகூர்-மைசூர் (NH-67) சாலைக்கு அருகே விளமல்-தியாக பெருமாநல்லூர் தெரு மற்றும் விளமல் - தியாகபெருமாநல்லூர் பண்ணை தெரு ஆகிய இடங்களில் 11.89 ஏக்கர் நிலம் திருவாரூர் நகராட்சி தீர்மானம் எண். 3442 நாள் 28.09.2006-ன் படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசு அனுமதியுடன் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

திருவாரூர் புதிய பேருந்து நிலைய கட்டுமான பணிகளுக்காக, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 34 நாள் 31.01.2011, நகராட்சி தலைமை பொறியாளர் வெங்கடாச்சலம் அவர்களின் ஆணை Roc. No.50647/2012/DO3 நாள் 21.12.2012-இன் படியும் ரூ.600,00,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த திட்ட மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையத்திற்கு சிமெண்ட் தரைதளம் அமைத்தல், ரெஸ்டாரண்ட், கடைகள், காவல் துறை கட்டுப்பாட்டு அறை, கழிவறை கட்டுதல், இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் கட்டுதல், செப்டிக்டேங் கட்டுதல், புதிய பேருந்து நிலையத்திலிருந்து தேசிய நெடுஞ்சாலை வரை 200 மீட்டர் தூரத்திற்கு தார்சாலை அமைத்தல், காம்பவுண்ட் சுவர் கட்டுதல் ஆகிய பணிகளை செய்ய முடிவு செய்யப்பட்டு, அனுமதிப்பெற்று கட்டுமான பணிகள் நடைபெற்று வந்துகொண்டிருந்தது. பின்னர் திருத்திய மதிப்பீடாக நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களால் அனுமதிக்கப்பட்ட EAR No.378/2015-16 இன்படி ரூ. 660,00,000/- ஒதுக்கப்பட்டு பணிகள் நடந்து வந்துகொண்டிருந்தது.

ஆனால் மேற்கண்ட திட்ட மதிப்பீட்டில் குறிப்பிட்ட புதிய பேருந்து நிலையத்திற்கு சிமெண்ட் தரைதளம் அமைத்தல், இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் அமைத்தல், புதிய பேருந்து நிலையத்திலிருந்து தேசிய நெடுஞ்சாலை வரை 200 மீட்டருக்கு தார் சாலை அமைத்தல் மற்றும் மழைநீர் வெளியேற்ற வடிகால் கட்டமைப்பு அமைத்தல் ஆகியவற்றிற்காக மீண்டும் ரூ.426 லட்சம் வேண்டுமென திருவாரூர் நகராட்சி தீர்மானம் எண் 549 நாள் 28.01.2016 இன் படி நகராட்சி நிர்வாக ஆணையருக்கு கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ROC No . 14541/P1/2016 இன் படி அனுமதி அளித்தும் கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

| S.No. | Description of work | Estimate amount | Source of Fund-(Rs. In lakh) | | |
|---|---|---|---|---|---|
| | | | TNUDF Load | Mpl. General fund | Total Estimate cost |
| 1 | Providing cement concrete road inner and outer around bus stand building. | 320.00 | 383.40 | 42.60 | 426 |
| 2 | Providing BT surface to Approch road to Bus stand from NH 67 (North to South) | 46.00 | | | |
| 3 | Construction of storm water drain and cross culvert to inner bus stand | 15.00 | | | |
| 4 | Construction of Two wheeler stand | 45.00 | | | |
| | Total | 426.00 | 383.40 | 42.60 | 426.00 |

1. இத்திட்ட மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலைய கட்டிடத்தின் உள் மற்றும் வெளிப்பகுதிகளுக்கு ரு. 320,00,000/- மதிப்பீட்டில் சிமெண்ட் தரைதளம் அமைக்கும் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது.

2. புதிய பேருந்து நிலையத்திலிருந்து தேசிய நெடுஞ்சாலை 67 வரை (200 மீ நீளம்) தார் சாலை அமைக்க ரு.46,00,000/- இக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அனுதிக்கப்பட்டுள்ளது. தார்சாலை அமைக்க, Wed Mix Macadam அமைத்தல், 7 Kg/10Sq.M. அளவில் தார் பரப்புதல், 2.5 Kg/10Sq.M. அளவில் தார் பரப்புதல், 50 mm தார்ஜல்லி கலவை பரப்புதல், 40 mm தார்ஜல்லி கலவை பரப்புதல் ஆகிய வேலைகளுக்கு தனித்தனியாக தொகை குறிப்பிடப்பட்டிருந்தும் அவற்றில் 648 க.மீ-க்கு (1க.மீ-க்கு ரு.2168.54) Wed Mix Macadam அமைக்க ரு. 1405214/- ஒதுக்கப்பட்டிருந்தும், உரிய முன்அனுமதியும் இல்லாமல் கூடுதலாக 950.76 க.மீ.க்கு (க.மீ-க்கு ரு. 2194) ரு.2085967/- செலவழித்ததாக போலியாக குறிப்பிடப்பட்டுள்ளது . மேலும் மற்ற பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகைகள் ரு. 31,94,786/- பணி செய்யாமலேயே எடுக்கப்பட்டு கையாடல் செய்யப்பட்டுள்ளது.

3. ரூபாய் 45,00,000/- இக்கு இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் அமைக்க திட்டமிடப்பட்டு அது தொடர்பாக 19 வேலைகளாக பிரிக்கப்பட்டு அதற்கான தொகையும் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வேலைகளில் வாகனங்கள் நிறுத்துமிடத்தில் (1:2:4) சிமெண்ட் கான்கிரீட் அமைக்க ரு. 1,77,520.73/- இம் அந்த இடங்களுக்கு சிமெண்ட் பூச்சு (1:5) பூச ரு.8869/- யும், சுவர்களுக்கு, தூண்களுக்கு சிமெண்ட் பூச்சுபூச ரு.15719/- இம், மின் இணைப்பு, மின் உபகரனங்களுக்காக ரு.55032/- இம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் மேற்குறிப்பிட்ட வேலைகள் செய்யப்படாமலேயே அதற்கான தொகை ரு. 2,57,140.73 எடுக்கப்பட்டு கையாடல் செய்யப்பட்டுள்ளது. மேலும் இரு சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கு தரைதளமே அமைக்கப்படாமல் வாகன நிறுத்துமிடம் அமைக்கப்பட்டுள்ளது.

4. இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்திற்கு தரைதளம் அமைக்க மீண்டும் ரு.9,90,000/- திட்ட மதிப்பீட்டில் மீண்டும் நிதி ஒதுக்கப்பட்டும், அவை 9 வேலைகளாக பிரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அப்பணிகளில் இருசக்கர வாகன நிறுத்துமிடத்தின் 100 கிலோ இரும்பு கம்பிகள் பயன்படுத்தி சென்டரிங் செய்து கட்டைகளை உயர்த்துதல், Lintel, Sunshade Roof Slab அமைத்தல் போன்ற 3 பணிகள் செய்யப்படாமலேயே அதற்கான தொகை ரு.22971/- எடுக்கப்பட்டு கையாடல் செய்யப்பட்டுள்ளது.

5. புதிய பேருந்து நிலையத்திலிருந்து தேசிய நெடுஞ்சாலை 67 வரை (200 மீ நீளம்) தார்சாலை அமைக்க மீண்டும் மூன்றாவது முறையாக ரூ.42,50,000/- இக்கு திருவாரூர் நகராட்சி பணி மேற்பார்வையாளர், நகராட்சி பொறியாளர் ஆகியோரால் ஒரு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு தஞ்சாவூர் மண்டல செயற்பொறியாளர் திரு.திருமாள்வளவன் அவர்களால் E.R.N. 29/R/EET/2018-19 இன் படி 20.12.2018 அன்று தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்றுள்ளது.

6. அதேபோல் மூன்றாவது முறையாக இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிட கட்டுமானத்ததிற்காக தரைதளம் அமைப்பதற்காக மீண்டும் 9.90 லட்சத்திற்கு AS No. MCR No. 120/27.02.2019 இன் படியும் T.S.No. MCR No. 183/20.02.2019 இன்படி திட்டமிடப்பட்டு அதற்கான தொகையும் எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இதுநாள் வரை தரைதளம் முறையாக அமைக்கப்படாமல் பணம் கையாடல் செய்யப்பட்டுள்ளது.

7. முதல் திட்ட மதிப்பீட்டில் செப்டிக்டேங் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் பணிகள் செய்யப்படாமல் இருந்து மீண்டும் MCR No. 49/11.06.2018, MCR No. 108/28.09.2018 இன்படி ரூ.25,00,000/- திட்ட மதிப்பீட்டில் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

8. முதல் திட்ட மதிப்பீட்டில் பேருந்து நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் பணிகள் அம்மதிப்பீட்டில் முழுமையாக பணிகள் மேற்கொள்ளாமல் சுவர்களுக்கு பூச்சுபூச மீண்டும் ரூ.5,60,000/- நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருவாரூர் புதிய பேருந்து நிலைய பகுதிகளில் சிமெண்ட் தரைதளம் அமைக்க, பேருந்து நிலைத்திலிருந்து தேசிய நெடுஞ்சாலைவரை 200 மீட்டருக்கு தார்சாலை அமைத்தல், இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் அமைத்தல், பேருந்து நிலைய பகுதியில் மழைநீர் வெளியேற்ற வடிகால் கட்டுமானம் அமைத்தல் ஆகிய வேலைகள் ஏற்கனவே ரூ.600,00,000/- மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டிருந்தும், பின்னர் திருத்திய மதிப்பீடான ரூ.660,00,000/- இம் குறிப்பிட்டிருந்தும் மேற்கண்ட பணிகளை சரிவர செய்யாமல், மீண்டும் அதே மதிப்பீட்டில் கூறப்பட்டுள்ள துணை பணிகளுக்கு ரூ.426,00,000/- பெற்றும், அதற்கு பின்னரும் தார்சாலை அமைக்காமலும், இருசக்கரவாகனம் நிறுத்துமிடத்திற்கு தரைதளம் அமைக்காமலும் அதற்குண்டான தொகை ரூ.34,74 897.73/- ஐ கையாடல் செய்துள்ளதாக தெரியவருகிறது.

மேற்படி எதிரிகள் A1 முதல் A5 வரையிலான பொது ஊழியர்கள், A6 முதல் A8 (தனிநபர்கள்) ஒப்பந்ததாரர்கள் ஆகியோர் முறையாக கட்டுமானப்பணிகளுக்கான டெண்டர் விதிமுறைகளை பின்பற்றாமலும், ஒரே வேலைக்கு பலமுறை மதிப்பீடு தயாரித்து அதற்கான

நிதியை கையாடல் செய்து, வேலைகளை சரியாக செய்யாமலும், தரமான கட்டுமான பொருட்களை பயன்படுத்தாமலும், போலியாக அளவு புத்தகங்கள் தயார் செய்தும், கட்டுமான கம்பிகள் வெளியில் தெரியக்கூடிய நிலையிலும், தரைதளங்கள் உள்வாங்கியும், தார்சாலையில் பள்ளங்கள் ஏற்பட்டும் பொதுமக்கள் பயன்படுத்த முடியாத அளவில் ஆபத்தான வகையில் எதிரிகள் அனைவரும் கூட்டுசதி செய்து, நேர்மையற்ற வகையில் குற்றமுறு நம்பிக்கை மோசடி செய்தும், அரசை ஏமாற்றி, ஒப்பந்த வேலைகள் ஒப்பந்தத்தில் உள்ளவாறு அமைக்காமல் உள்ள போதிலும், பணிகள் நடைபெற்றது போன்று தவறாக ஆவணங்களை தயார் செய்தும் அதன் மூலம் எதிரிகள் அநியாய லாபம் அடைந்தும், அரசுக்கு நிதியிழப்பு ஏற்படுத்தியுள்ளனர் என்பது தெரியவருவதால் மேலே குறிப்பிட்டுள்ள எதிரிகளின் செய்கை நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தவேண்டியது அவசியமாகிறது. மேலே கண்ட எதிரிகளின் செயல் தொடர்பாக Prevention Corruption Act 2018, Sec 17(A)-ன் படி நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் செயலாளர் அவர்களின் கடிதம் எண் Letter (D) No.263, dated 23.08.2021-ன் படி உரிய துறை அனுமதி பெற்றும், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநர் அவர்களின் நமூனா எண் VR.No.1048/2019/LB/TVR நாள் **13.12.2021**ல் குறிப்பிடப்பட்ட வழிக்காட்டுதலின் படியும், அறிவுரைகளின் படியும் திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 01/2022 சட்ட பிரிவுகள் 120(B), 409, 420, 465, 468, 471 IPC and 13(2) r/w 13(1)(c), 13(1)(d) of PC Act 1988 as amended 2018 and 109 IPCயின் படி இன்று 03.02.2022ஆம் தேதி 12.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசலினை, தலைமை நீதித்துறை நடுவர்/சிறப்பு நீதிபதி திருவாரூர் அவர்களுக்கு அனுப்பியும், நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பில் வைக்கப்பட்டது.

3/2/22

**துணை காவல் கண்காணிப்பாளர்,**
**ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,**
**திருவாரூர்.**

**<u>திருவாரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.01/2022 U/s 120(B), 409, 420, 465, 468, 471 IPC and 13(2) r/w 13(1)(c), 13(1)(d) of PC Act 1988 as amended 2018 and 109 IPC வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.</u>**

**எதிரிகள் விபரம்.**

A1) திருமதி.K. உமாமகேஸ்வரி, க/பெ. கண்ணன், முன்னாள் நகராட்சி ஆணையர், திருவாரூர்.

A2) திரு.P.ஜோதிமணி, த/பெ. பிச்சைப்பிள்ளை, முன்னாள் நகராட்சி பொறியாளர், திருவாரூர்.

A3) திரு.M. காந்திராஜ், த/பெ. S.முத்தையன், முன்னாள் நகராட்சி ஆணையர், திருவாரூர்.

A4) திரு.வெங்கடேசன், பணி கள மேற்பார்வையாளர், நகராட்சி அலுவலகம், திருவாரூர்.

A5) திரு.நாகராஜன், பணி கள மேற்பார்வையாளர், நகராட்சி அலுவலகம், திருவாரூர்.

A6) திரு.D.முருகவேல், ஒப்பந்ததாரர், 166 ஹரேராம் நகர், திருவள்ளூர், சென்னை.

A7) M.தாமோதரன், 4/13, Sarnapuri Appartments, 3A 3rd Lloor, Mugappair, Chennai,

A8) J.M.Construction, 166 Hereram & Nagar, Rajajipuram, Thiruvallur.

V.[signature] 3/2/22

துணை காவல் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
திருவாரூர்.